[1973 ஆகஸ்ட் 4

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் என்னுடைய இடத்தில் தான் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் இடம் இல்லை. உங்கள் இடம் உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி, சௌடி சுந்தர பாரதி இவர்களுக்கு மத்தியில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் இங்கே இருப்பது வசதி யாக இருக்கிறது. நான் ஒரு பெண் உறுப்பினர் என்ற முறையில் இந்த இடத்தை எனக்கு ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள் கிறேன்.

Sir, may I make a request to the Chair? Because I happen to be a Lady Member, kindly transfer my seat to the corner so that it may be convenient to other hon. Members also.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, சில மருந்துகள் அதிக விலைக்கு விற்று வருகின்ற காரணத்தினால் இந்த மருந்துகளின் விலைப் பட்டியலை அந்தந்த மருந்துக் கடை களில் போட்டுவைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால் அதைப் பார்த்து மக்கள் வாங்கிக்கொள்வதற்கு வசதி ஏற்படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதைப் பரிசீலித்து, நல்ல முறையாக இருந்தால் அதைச் செயல்படுத்த இலாகாவினரைக் கேட்டுக்கொள்ளலாம்.

Prevention of students from becoming drug addicts

* 12. *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to prevent the students becoming drug addicts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1973 ஆகஸ்ட் 4]

திரு. என். கே. பழனிசாமி : இங்கு வருகிற ஹிப்பிகள் மாண வர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் போதைப் பொருள்களைத் தருவதும், மாணவர்கள் அந்தப் போதைப் பொருள்களை உபயோகப்படுத்துவதையும் சர்க்கார் பரிசீலனை செய்து தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'Whether there is any proposal to prevent students from becoming drug addicts in the State என்பது மூலக் கேள்வி. மாணவர்கள் அதிகமாக போதைப் பொருள்களை உண்டுவருகிறார்கள் என்று ஒப்புக்கொள்ளக் கூடிய அளவுக்கு ஆதாரம் எதுவும் இல்லை. முதல் கேள்வியையே ஒப்புக்கொண்டால்தான் இரண்டாவது கேள்வியே எழுகிறது. எங்காவது சில இடத்தில் குறை இருக்கக்கூடும். இந்தக் கேள்விக்கு மருத்துவத் துறையினர் தந்திருக்கக்கூடிய பதில்

The Director of Medical Education has reported that according to the Deans and Principals of the State Medical Colleges, there has been no instance of drug addiction among students of medical colleges and so the question of preventing medical students from becoming drug addicts in this State, does not arise.என்பதாகும். ஆனால், இன்னொரு பக்கம் போதை தரக்கூடிய சில மருந்துகள் அதிகமாக விற்பனையாகிறது என்பது ஒரு கருத்தாக இருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டும் வருகிறது. போதை தரும் மருந்துப் பொருள்களை டாக்டர் ப்ரிஸ்க்ருப்ஷன் இல்லாமல் யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்கிற கருத்தும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதைத்தவிர வேறு சில மாணவர்கள் பரவலாக, நிரம்ப போதை தரும் மருந்துப் பொருள்களைச் சாப்பிடுகிற சூழ்நிலை இருப்பதாக எந்தவிதமான குறிப்பும் அரசுக்கு இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : சில மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திருக்கின்ற மருத்துவ மனைகளில் பெத்தடீன் ஊசிகளை சிலர் போட்டுக்கொள்கிறார்கள் என்று தெரிகிறதே, அதனைத் தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுவும் ஆயிரத்தில் ஒன்றாகத்தான் இருக்கும். உடல் கோளாறு காரணமாக மிகவும் பரிதாபத்திற்குரிய நிலை ஏற்படுகிறபோதுதான் சிலர் அந்தப்

பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். பெத்தடீன் போட்டுக்கொள்வதால் அவர்கள் சீராகச் செயல்பட முடியாத நிலைமைதான் ஏற்படும் என்பதால் அந்தந்த இலாக்காவில் உள்ள மேலதிகாரிகள் அவர்களுக்கு அறிவுரை கூறி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஹிப்பீஸ் போன்றவர்கள் போதைதரும் மருந்துகளை விற்பனை செய்கிறார்கள். அவர்களும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான நிலைமை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படி வந்திருந்தால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹிப்பீஸ் பற்றி தெரிவித்திருக்கும் கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ ஹிப்பீஸ் செல்வாக்கு வேரூன்றவில்லை. அவர்களுடைய செல்வாக்கு இங்கே ஏற்படாத அளவுக்கு நம்முடைய தமிழகத்தின் பண்பாடு நம்மைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன். எனவே, அதன் தொடர் விளைவுகளும் தமிழகத்தில் குறைவாகத் தான் இருக்கும் என்று நம்புகிறேன்.

கடற்பகுதிகளில் மீன் பிடித்தல் குறித்த ஆய்வு.

*13. **வினா—திருமதி த. ந. அனந்தநாயகி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நமது கடலில் எந்தெந்த இடத்தில் எந்தெந்த ரகமான மீன்கள் இருக்கின்றன என்பது பற்றி சர்வே செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்.

நமது கடற்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி சுற்றாய் வினால் கிடைத்த விவரங்கள் பின்வருமாறு—

பொதுவாக கிழக்குக் கடற்கரையையொட்டி கீழ்க்கண்ட வாணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் பிடிக்கப்படுகின்றன.